REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 3உ செவ்வாய் (19—7—55) ★ ★ வெளியீடு: ஆடி 4உ புதன் (20—7—55) [இதழ் 30

ரூ. 20 கோடியில் உர உற்பத்தித் திட்டம்

மத்திய சர்க்கார் பரிசீலிக்கிறதாம்!

ராமகுண்டம் அல்லது கோத்தகுண்டம் எனுமிடத்தில் ரூ. 20 கோடி செலவில் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக முதன் மந்திரி அனுமந்தையா குறிப்பிட்டிருக்கிறார்.

பெப்சு மந்திரி சபையில் வல்லடி வழக்கு!

'தன்னை ஆதரிக்காதவர்களை வஞ்சம் தீர்க்கிறார்'

'மற்ற அமைச்சர் தினசரி அலுவல்களில் குறுக்கிடுகிறார்'

முதல் மந்திரி பிரிஷ்பானை சந்திக்கு இழுக்கிறார் நிலவரி மந்திரி அரிசரண் சிங்!

பாடியாலா, ஜூலை 17—

பெப்சு காங்கிரஸ் அமைச்சரவைக்குள் புகைச்சல் கிளம்பி இருக்கிறது!

'பழிவாங்கும் மனப்போக்குடன்' முதல் மந்திரி பிரிஷ்பான் நடந்துகொண்டுவருவதாக, நிலவரி மந்திரி சர்தார் அரிசரண் சிங், சட்டசபை காங்கிரஸ் கட்சி கூட்டத்தில், வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

நிலவரி மந்திரியைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கு கொள்ளவில்லை.

ஏப்ரல் முதலில் நடைபெற்ற காங்கிரஸ் சட்டசபை கட்சித் தேர்தலில் தம்மை ஆதரிக்காத சட்டசபை உறுப்பினர்கள் அனைவரின் மீதும் பழிதீர்த்துக்கொள்ளும் பணியில் தீவிரமாக முதல் மந்திரி பிரிஷ்பான் ஈடுபட்டிருப்பதாக, நிலவரி மந்திரி சிங் குற்றஞ்சாட்டினர்.

இந்நிலையில், கூட்டத்திலிருந்த அரிசன உறுப்பினர்கள், நிலவரி மந்திரி மீது சீறிவிழுந்து, உட்காரும்படி கூச்சலிட்டனர்;

தன்னுடைய அமைச்சர் துறை தினசரி அலுவல்களில், முதல் மந்திரி அளவு கடந்து குறுக்கிட்டு வருவதாகவும், நிலவரி மந்திரி குறைகூறினர்.

குற்றஞ்சாட்டிவிட்ட உடன், முதல் மந்திரியின் பதிலை எதிர்பார்க்காமலேயே, நிலவரி மந்திரி கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

இவ்வளவும், சட்ட சபையில் வழக்கமாகக் கொண்டுவரப்பட இருக்கும் சில மசோதாக்களைக் குறித்து ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் கூட்டத்தில் நடைபெற்றிருக்கிறது. மொத்தம் 37 உறுப்பினர்களில் 21 பேர்களே கூட்டத்தில் கலந்துகொண்டனர்

சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த கர்னல் இரகுவீர்சிங் மரணமடைந்துவிடவே, அவருடைய இடத்திற்கு சென்ற ஏப்ரலில் தேர்தல் நடைபெற்றது அத்தேர்தலில் தலைவர் இடத்திற்கு பிரிஷ்பான் போட்டி இட்டார் அவரை எதிர்த்து சர்தார் அரிசரண் சிங் வேலை செய்தார். ஆனால் காங்கிரஸ் மேலிடம் இறுதியாகத் தலையிட்டு, பிரிஷ்பானைப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கச் செய்தது.

மேற்படி கூட்டச் சம்பவம், காங்கிரஸ் மேலிடத்திற்கு உடனே அறிவிக்கப்பட்டு இருக்கிறதாம்.

அரசியல் கட்சிகளின்பலம்

பண்டித நேரு கருத்து

"ஒரு அரசியல் கட்சியின் பலம் அது தொடர்ந்து கவனத்தோடு இருப்பதையும், காலத்திற்கு ஏற்றபடி தன்னைத் திருத்தி அமைத்துக் கொள்வதிலும்தான் உள்ளது,"

என்று, பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை சர்க்காரின் பாரபட்சம்!

அகில உலக தொழிலாளர் சபை பரிசீலிக்கும்

பம்பாய், ஜூலை 17—

இலங்கையில், தொழிலாளர்களுக்கு வேலைகள் கொடுக்கப்படுவதில் சுமார் 9½ லட்சம் இந்தியர்களைப் பாதிக்கும் முறையில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஐ. நா. சபை கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க சர்வதேசத் தொழிலாளர் நிறுவனத்தின் நிர்வாக சபை, வருகிற நவம்பர் திங்களில் ஜெனீவாவில் கூடுகிறபோது இப்பிரச்சினை பற்றி விவாதிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது

இந்தி எதிர்க்கப்படும் காரணமே தெரியாதோ?

"தேசிய மொழியான இந்தியை உடனடியாக அரசாங்க மொழியாக்க வேண்டும்;

"இந்தியை தேசிய மொழியாக்குவதற்கு சுமூகமான ஒருவழி, இன்னும் 10 ஆண்டுகளுக்கு, இந்தி மொழிக்காரர்கள் அகில இந்திய சர்வீஸ் பரீட்சைகளுக்கு போட்டியிடாமல் இருக்குமாறு கேட்டுக்கொள்ளலாம்,"

என்று, ம சோ. கட்சி தலைவர் டாக்டர் லோகியா, சென்னைக் கூட்ட மொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

4 மாத போனஸ்!

நாகபுரி, ஜூலை 18—

மத்தியப் பிரதேசத்திலுள்ள மாங்கனீஸ் சுரங்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்கட்கு 1953—54-ம் ஆண்டிற்கு 4 மாத போனஸ் வழங்க மத்திய சர்க்கார் தொழில் நீதிமன்றம் தீர்ப்பு விதித்திருக்கிறது என்று தெரிகிறது.

ஜனநாயக ஆட்சி கோரி கிளர்ச்சி

நேபாள காங்கிரஸ் துவங்கியுள்ளதாம்!

பாட்னா, ஜூலை 18—

பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்தியாவிலிருந்து அன்பளிப்பாகக் கிடைத்த அரிசியை இலவசமாக விநியோகிக்க வேண்டும்—எல்லோருக்கும் குறைந்த விலையில் உணவு தானியங்கள் கிடைக்கச் செய்யவேண்டும்—நிலவரியில் 25 சதவிகிதத்தை தள்ளுபடி செய்யவேண்டும்—நீர்ப்பாசனத்திற்கு அபிவிருத்தித் திட்டங்கள் வேண்டும்—ஜனநாயக முறைப்படி ஆட்சி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக, நேபாள காங்கிரஸ், கிளர்ச்சி ஒன்று துவக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த ஜூலை 13 முதல் ஜலேஷ்வர் என்ற தெராய் மாவட்டத் தலைநகரில் கிளர்ச்சி துவக்கப்பட்டிருப்பதாக நேபாள காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரும், நேபாளத்தின் முன்னாள் உள்நாட்டு மந்திரியுமான சூர்ய பிரசாத் உபாத்தியாயா என்பவர் தகவல் தந்திருக்கிறாராம்.

தெராய் மாவட்டம் பஞ்சத்தால் பிணியால் பீடிக்கப்பட்டு, மிகவும் அவதியுறுவதாகக் கூறப்படுகிறது.

மொராக்கோவில் கலகம்

63 பேர்கள் கொல்லப்பட்டனராம்!

போலீஸ் அதிகாரி தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கம்!

கசாபிளாங்கா, ஜூலை 18—

கசாபிளாங்கா நகரில் கடந்த நான்கு தினங்களாக நடைபெற்ற கலவரத்தின் விளைவாக 63 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

அதை ஒட்டி, மொராக்கோவில் உள்ள பிரெஞ்சு 'ரெசிடெண்ட் ஜெனரல்' எம் கில்பர்ட் கிராண்ட்வால், கசாபிளாங்கா நகரின் பிரதம போலீஸ் கமிஷனரான எம். வர்க்கோலி என்பவரை தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைத்து உத்திரவு பிறப்பித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

கலவரத்தை அடக்க மேற்கொள்ளப்படவிருக்கும் பல கடுமையான நடவடிக்கைகளில் இது முதலாவது என்று கூறப்படுகிறது.

கடந்த வியாழனன்று ஆறு பிரெஞ்சுக்காரர்களை பலி கொண்ட குண்டுத் தாக்குதலுக்காக மொராக்கோவினரை வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஐரோப்பியர்கள் யத்தனித்தபோது, மோதுதலைத் தவிர்க்க போலீசார் தலையிடத் தவறிவிட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. போலீஸ் அமைப்பே முழுவதும் மாற்றி அமைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

தேசியத் திட்டக் கடன் பத்திரங்களுக்கு-இரண்டாவது தொடர் (1965-ல் திருப்பித் தரப்படும் 3½ சதவிகிதக் கடன்)—மொத்தம் சுமார் ரூ. 103,65,00,000 ரூபாய் வசூலாகியுள்ளது. கடன் பத்திர மாற்றங்கள் மூலம் கிடைத்த தொகை மொத்தம் ரூ. 57,87,00,000 ஆகும்.

ஆட்சி மொழி பற்றி வினாத்தாள்

மொழிக் குழுத் தலைவர் கெர் அறிவிப்பு

பம்பாய், ஜூலை 18—

மத்திய சர்க்காரிலும், மாநிலங்களிலும் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியையோ, அல்லது மற்ற மொழிகளையோ ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு, எப்படி, எவ்வளவு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கலாமென்று யோசனைகள் கேட்டு 34 அம்ச கேள்வித் தாள் ஒன்றை குழு அனுப்புமென உத்தியோக மொழிக் குழுத் தலைவர் பி. ஜி. கெர் குறிப்பிட்டிருக்கிறார்.

குழுவின் அறிக்கை, இந்த வினாத்தாளுக்குக் கிடைக்கும் பதில்களை ஒட்டி இருக்கும் என்றும், இந்த மாத முடிவில் வினாத்தாள் பிரதிகள் அனுப்பப்பட்டு ஒரு மாதத்திற்குள் பதில்கள் பெறப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை, பெங்களூர், கர்னூல் உட்பட பல இடங்களுக்கு குழு வருகை தருமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மே. பாக். ஒருவட்ட ஆட்சியமைப்பை ஒப்பாததின் எதிரொலி!

எல்லைப்புற மந்திரிசபைக்குச் சீட்டு!

பெஷாவர் ஜூலை 18—

சர்தார் அப்துர் ரஷீத்தை முதல் மந்திரியாகக் கொண்டிருந்த பாக். எல்லைப்புற மந்திரி சபையை, எல்லைப்புற கவர்னர் உடனடியாகக் கலைத்துவிட்டார். பலுஜிஸ்தானில் பாக். கவர்னர் ஜெனரலின் ஏஜெண்டாக இருந்துவரும் சர்தார் பகதூர் கானுக்கு, மந்திரி சபை அமைக்கும்படி, எல்லைப்புற கவர்னர் விடுத்த அழைப்பை, அவரும் ஒப்புக்கொண்டார்.

வெளியேற்றப்பட்டுள்ள சர்தார் அப்துர் ரஷீத், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன், எல்லைப்புறத்தில் போலீஸ் தலைமை அதிகாரியாக இருந்தவர்தார். மேற்கு பாகிஸ்தானை 'ஒரு வட்ட ஆட்சி அமைப்பு'க்குள் கொண்டுவர வேண்டும் என்ற கருத்துக்கு எதிராக இருந்து வந்ததினாலேயே, ரஷீதின் பதவி பறிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

'ஒரு வட்ட ஆட்சி அமைப்பு' ஏற்பாட்டிற்கு தான் எதிராக இருப்பதற்கான காரணத்தை பதினைந்து தினங்களுக்குள் விளக்கிக் கூறவேண்டுமென அரசியல் ஆக்க மன்றத்திலுள்ள முஸ்லீம் லீக் கட்சியினர், ரஷீதைக் கோரி இருந்தனர்.

ஒரு வட்ட அமைப்பு குறித்து கான் அப்துல் கபார்கானுக்கும் தனக்கும் எந்தவித உடன்படிக்கையும் கிடையாது என்று ரஷீத் மறுத்துள்ளார்.

ஒரு வட்ட ஆட்சி அமைப்பை எதிர்த்ததின் விளைவாக இதுவரை வெளியேற்றப்பட்ட மந்திரி சபைகளில், ரஷீத் மந்திரி சபை நான்காவதாகும்.

மக்மத் ஆசனை முதல் மந்திரியாகக் கொண்ட பகல்பூர் மாநில அமைச்சரவை முதலாவது ஆகும். இரண்டாவது மந்திரி சபை பீர்ஜாதா அப்துல் சத்தார் தலைமையில் இருந்த சிந்து அமைச்சரவை; மூன்றாவது மந்திரி சபை, பெரோஸ்கான் நூனை தலைவராகக் கொண்ட பஞ்சாப் அமைச்சரவையும் ஆகும்.

நீக்கப்பட்ட மந்திரி சபையின் தலைவரான சர்தார் அப்துர் ரஷீத் எல்லைப்புற மாநிலத்தின் தலைமை போலீஸ் இலாகா அதிகாரியாக இருந்தவராவர்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் மொத்தம் சுமார் 6,500 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுவிடும்; இரண்டாவது திட்ட காலத்தில் பின்னும் சுமார் 10,000 - 12,000 கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—7—'55 செவ்வாய்

நல்ல சான்று!

'நாம் விதிக்கும் தடையை அவர்கள் மீறுவதா? அப்படித் தடையை மீறுவோரை நாட்டில் உலவ விடுவதா? நாம் என்ன சாதாரணக் குடிமகனா? குடிமக்களால் கோலேந்தும் பதவி, பாதுகாப்பு, அதிகாரம், ஆள், அம்பு அத்தனையும் பெற்றவராயிற்றே! சிறைக்கூடங்கள் இருக்கின்றன — அகல வாய் திறந்து ஆயிரக்கணக்கானோரை விழுங்கிக்கொள்ள! போலீசார் இருக்கின்றனர்— பூண் பூட்டிய தடியும், மருந்தூட்டிய துப்பாக்கியுமாக! இராணுவம் இருக்கிறது; பீரங்கி இருக்கிறது! இத்தனைக்கும் மேலாக எத்தனையோ இதழ்கள் உண்டு—என் செயல் 'சரி' எனக் கூறிப் பாராட்ட! பட்டமளிக்கவும் 'ஷொட்டு'க் கொடுக்கவும் 'கூடி வாழ்வதெப்படி?' என்பதை உலகுக்கே போதிக்கும் தலைவர்கள் இருக்கிறார்கள். இத்தனையும் உடைய நான் விதிக்கிறேன் தடை!— அதை மீறுவதா இந்த அகாலி தளத்தவர்? என்ன நெஞ்சுரம்! பார்க்கிறேன் ஒரு கை!'-என்று கூறினர் பஞ்சாப் முதன் மந்திரியான பீம்சேன் சச்சார், இரண்டு திங்களுக்கு முன்னால் சீக்கியர் தலைவர் மாஸ்டர் தாரா சிங் தலைமையில் உள்ள அகாலி தளத்தவர், தங்களின் உரிமைக் குரலுக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவை எதிர்த்து அமிர்தசரஸ் பொற்கோவிலுக்கு முன் கிளர்ச்சியைத் துவக்கியபோது.

'சீக்கிய நாடு சீக்கியருக்கே' என்ற லட்சியத்தை உள்ளடக்கி பஞ்சாப் மொழிவழி மாநிலம் வேண்டுமென்பது, அகாலிதளத்தவர் கோரிக்கை என்றும், இந்தக் கோரிக்கையை ஏற்க மறுப்போர் 'இந்தியா ஒரே நாடு' என்று ஒப்பாரம் பாடிக்கொண்டு, 'மகா பஞ்சாப்' என்ற பெயரில் இப்போதுள்ள பஞ்சாப், பெப்சு, டில்லியின் சில பகுதிகள் முதலியவற்றை உள்ளடக்கிய மாநிலம் வேண்டும் என்று பேராசைக் கோரிக்கையை எழுப்புகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

அந்தக் கோரிக்கைகள் பற்றியல்ல—நாம் இங்கு இப்போது குறிப்பிடுவது.

சீக்கியர்களின் பெரும்பான்மையினரின் ஆதரவிற்குப் பாத்திரமாக விளங்குகிற அகாலி தள இயக்கம், 'பஞ்சாப் மொழிவழி மாநிலம் வேண்டும்' என்று ஒரு கோரிக்கையை எழுப்புகிறது. இந்திய அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளின்படி, அகாலிதளத்தவர் தங்கள் கோரிக்கையை நாட்டவருக்கும்—நாடாள்வோருக்கும் எடுத்துச் சொல்ல உரிமை படைத்திருக்கின்றனர்.

'வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணாக, ஊர்வலங்கள் நடத்தாதே! கூட்டங்கள் கூட்டாதே! லட்சிய ஒலி முழக்கம் எழுப்பாதே!' என்று தடை உத்தரவிட்டது—பஞ்சாபில் உள்ள பீம்சேன் சச்சாரின் மந்திரிசபை.

தங்கள் உரிமை, தங்களின் கண்ணெதிரே பறிக்கப்படுவது தங்களின் இலட்சியத்தைக் கருவறுக்க நடைபெறும் சூழ்ச்சி என்பதைப் புரிந்துகொண்ட அகாலிதளம், தங்களின் பறிக்கப்பட்ட உரிமையை நிலைநாட்டிக் கொள்ள போர்க்களம் கண்டது.

மாஸ்டர் தாராசிங்கின் சொல்லைத் 'தாரக மந்திர'மாகக் கொண்ட சீக்கியக் காளையர் திரண்டெழுந்தனர்—அணி வகுத்தனர்—களம்புகுந்து உரிமைக் குரல் எழுப்ப!

முதலமைச்சர் சச்சார் 'இரண்டொரு தினங்களில் அகாலியரின் உரிமைப் போரை அடக்கிவிடலாம்,' எனக் கனவு கண்டார்; கொக்கரித்தார்— 'சிறையில் நிரம்ப இடம் இருக்கிறது'—என்று கேலி பேசினர்; மாஸ்டர் தாராசிங்கையும், அவருக்குப் பின்னாலிருந்த தலைவர்கள் பலரையும் சிறைப்படுத்தினர்; என்றாலும், புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல, சீக்கியர், அணி அணியாக, தினம் தினம் வந்துகொண்டே இருந்தனர்— போர்க்களத்திற்கு!

நமது கழகத்தைப் பற்றி ஆச்சாரியாரும், அவரது எஜமானர்களும் தப்புக் கணக்குப் போடவில்லையா, என்ன? அதுபோலவே, அகாலியரைப் பற்றியும் சச்சார் தப்புக் கணக்குப் போட்டார்; பிடிவாதம் காட்டினர்; போலி கௌரவத்தினால் விதித்த தடையை திரும்பப் பெற மறுத்தார்; அதன் விளைவாக, சிறைகள் நிரம்பி வழிந்தன; பல்லாயிரம்—எட்டாயிரத்திற்கும் அதிகம் எனக் கூறப்படுகிறது— சீக்கியர்கள், சிறைக்கோட்டத்தைத் தங்களின் இருப்பிடமாக்கிக் கொண்டனர்; நாட்கள் நகர்ந்துகொண்டே இருந்தன; கிளர்ச்சி நீடித்துக்கொண்டே இருந்தது!

'ஒற்றுமை பாழாகும்; ஐக்கியம் சீர்குலையும்,' என்ற உபதேசங்கள்!

'ஒடுக்குவோம் — அடக்குவோம்; சட்டத்தை மீறுவதை சகியோம்,'—என்ற மத்திய உள்நாட்டு மந்திரியின் மிரட்டல்!

இவை எல்லாம்கூட அகாலியரின் உறுதியைக் குலைக்க முடியவில்லை; இரண்டு திங்கள் கிளர்ச்சி நடைபெற்றது.

கிளர்ச்சி வலுப்பெறுவது, சச்சாருக்குக் கிலியைத்தரத் துவங்கிற்று; தனது மந்திரிசபைக் கோட்டைக்குள்ளேயே குத்தும் வெட்டும், பிளவும் பிணக்கும் உருவெடுக்கவாரம்பித்தன; அவரது 'பதவி நாற்காலி'யை அசைக்க, காங்கிரசாரிலேயே பலர் பலத்த முயற்சிகளை மேற்கொள்ளத் துவங்கியிருப்பதையும் சச்சார் உணரத் தலைப்பட்டார். தனது வரட்டுப்பிடிவாதம் ஆறு, ஏழு கிழமைகளாக அமைதியுடன் நடைபெற்று வந்த கிளர்ச்சிக்கு ஒரு பலாத்காரத் திருப்பத்தைத் தர முற்பட்டதையும் அவர் உணர்ந்துதான் இருக்கவேண்டும். இறுதியாக, சென்ற கிழமை தடை உத்தரவு திரும்பப்பெறப்பட்டிருக்கிறது —குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே!

அகாலியரும் கிளர்ச்சியை தற்காலிகமாக நிறுத்திவைத்திருப்பதாகக் கூறியிருக்கின்றனர்.

கிளர்ச்சிக்காக மட்டும், சர்க்கார், சுமார் 10 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கின்றனராம்—இப்போது செய்தி கிடைத்திருக்கிறது.

ஒரு மந்திரி சபை, தனது கொள்கைக்கு மாறுபட்ட ஒரு இயக்கத்தவரின் குரலை ஒடுக்க மேற்கொள்ளும் முயற்சிக்காக மக்களின் வரிப் பணத்திலிருந்து - பத்து லட்சம் வாரியிறைத்திருக்கிறது. ஜனநாயகம் கைகொட்டிச் சிரிக்கிறது —இது கண்டு!

தடை விதிக்கப்பட்டது சச்சார் மந்திரி சபையால்—அந்தத் தடை உடைத்தெறியப்பட்டிருக்கிறது அகாலி தளத்தவரால்! வெற்றியை அணைத்துக் கொண்டவர்கள், கிளர்ச்சியில் ஈடுபட்டோரே அன்றி—சர்க்காரல்ல!

அரசியல் சட்டம் வழங்கும் உரிமையை நடைமுறையில் அனுபவிக்க, எண்ணாயிரம் பேர் சிறையில் வாடவேண்டியிருக்கிறது—மக்களின் வரிப்பணம் பத்து லட்சம் ரூபாய் செலவிடப்பட வேண்டியிருக்கிறது. என்னே 'ஜனநாயகம்'!

சச்சார் சர்க்கார் பெற்ற மகத்தான தோல்வி—தாராசிங் இயக்கம் பெற்ற மாபெரும் வெற்றி, தென்னகத்து விடுதலையில் நாட்டம் கொண்ட வீரர்களுக்கும், பொதுவாகவே விடுதலை விரும்பிகளுக்கும் மகிழ்ச்சியூட்டுவதாகும். ஆணவம் என்றும் அழியும்—அநீதி நிலைக்காது—அடக்குமுறை வெல்லாது—ஆர்வம் அழியாது—நீதி நிலைக்கும்—அறப்போர் வெல்லும் என்பதற்கு, தாராசிங் பெற்ற வெற்றி நல்லதோர் சான்றாகும்.

ருத்ரமாதா நதி மீது அணை

ரூ.15 லட்சம் மத்திய சர்க்கார் கடன் வழங்குகிறது

பூஜ் எனுமிடத்திலிருந்து எட்டு மைல் தொலைவிலுள்ள ருத்ரமாதா நதிமீது அணை ஒன்று கட்டுவதற்காக ரூ. 15 இலட்சம் தர மத்திய சர்க்கார் சம்மதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தத் திட்டத்திற்கு ரூ. 45 இலட்சம் செலவாகலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

1956-ம் ஆண்டிற்கென 'உணவு உற்பத்தியை அதிகரிக்க' என்ற திட்டத்திற்காக, கட்ச் அரசாங்கத்திற்கு இந்திய சர்க்கார் ரூ $3\frac{1}{2}$ லட்சம் தரவும் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

மேலும், கட்ச் மாநிலத்தில் 530 கிணறுகள் தோண்டவும், இரண்டாம் திட்டப்படி முடிவெடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சென்னை கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்காவில் சிறப்பு!

நியூயார்க் நங்கைகளின் நாகரீக உடைகளாகத் தோற்றமளிக்கிறது!

அமெரிக்காவில் இந்தக் கோடை காலம் இந்தியத் துணிகளுக்கு ஓர் நற்காலம்; இந்தியத் துணிகளைக் கொண்டு ஆடைகள் செய்ய அமெரிக்காவில் என்றுமில்லாத ஆர்வம்; பட்டுச் சேலைகளும் பருத்தி நூல் சேலைகளும், சாலைத் துணிகளும். சென்னைக் கைத்தறித் துணியும் அமெரிக்கப் பெண்கள் மனதைக் கவர்ந்துவிட்டன இவையே, அமெரிக்காவின் இன்றைய நாகரிகம்!

நாகரிகம் என்று யாரேனும் ஒன்று ஏற்பட்டுவிட்டால், அதன் விலை மனம்போல உயர்வது வழக்கம்; எனவே, இந்தியத் துணிகளால் செய்த உடைகளின் விலை ரூ. 300-லிருந்து ஆயிரக்கணக்காக உயர்கிறது ரூ 5,000-த்திற்காவது அதற்கு அதிகமாகவாவது ஒரு உடை வேண்டுமென்றாலும், 'உலகத்திலுள்ள பெரிய கடைத்தெரு' என்று நியூயார்க் மக்கள் சொல்லும் ஐந்தாவது தெருவில் அதனை வாங்கலாம்

நியூயார்க்நகரின் முக்கிய தெருக்களில் சிறிது தூரம் நடந்து சென்றால், யாரேனும் ஒரு நாகரிக நங்கை இந்தியச் சேலைத்துணியால் செய்த நாகரிக உடை அணிந்து வரப் பார்க்காமலிருக்க முடியாது.

இந்தியச் சேலையால செய்த ஆடைகளுக்கு இவ்வளவு மதிப்பு ஏற்பட்டதற்கு ஒரு காரணம், தற்காலக் கலை பற்றிய அமெரிக்க மியூசியம் நடத்திய துணி கண்காட்சியாகும். இரண்டு மாதத்திற்கு அக் கண்காட்சி ஏற்பாடு செய்திருந்தார்கள்; ஆனால், அது மூன்று மாதமாயிற்று; நாள்தோறும் 2,000 பேர் அதைப் பார்க்கிறார்கள்.

இந்தியத் துணியால் உடைகள் செய்து அணிவதற்குஆண்களும் பெண்களோடு போட்டியிடுகிறார்கள்; அவர்கள், சென்னையிலிருந்து இறக்குமதியாகும் கைத்தறி லுங்கித் துணிகளை சட்டைகளாகவும், கோட்டுகளாகவும் செய்து போடுகிறார்கள். அந்த உடைகளை அதிகமான பணம் கொடுத்து வாங்குகின்றனர். சென்னைத் துணியால் செய்த சட்டை விலை ரூ 65; விருந்துக்குப் போகும் போது அணியும் சட்டையின் விலை ரூ 150; பருத்தி நூலால் கைத்தறியில் செய்த துணியைக் கொண்டு செய்த விளையாட்டுக் களக் கோட்டுகள் ரூ 300-க்கு விற்கப்படுகிறது; இந்தியக் கச்சாப் பட்டால் செய்த விளையாட்டுக் களக் கோட்டின் விலை ரூ 600.

சட்டைகள் செய்வதில் புகழ் பெற்ற ஹாதவே என்பவர், சென்னைக் கைத்தறி லுங்கித் துணியால் செய்த சட்டைகளை சட்டை ஒன்று ரூ 60-க்கு விற்கிறார்.

அமெரிக்காவில் இந்தியத் துணிகள் இன்று இறக்குமதியாவது போல் என்றும் இறக்குமதியானதில்லை. 1955-ம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் $1\frac{1}{2}$ லட்சம் டாலர் பெறுமான துணிகள் இறக்குமதியாகியிருக்கின்றன 1954-ம் ஆண்டு முழுவதும் இதில் பாதிதான் இறக்குமதியாயிற்று அமெரிக்க ஆடைத் தொழிலோடு இதை ஒப்பிட்டு நோக்கினால் இது மிகச் சிறிய பகுதியே; ஆண்டிற்கு 1,500 கோடி டாலர் பெறுமான ஆடைகள் அமெரிக்காவில் செய்கிறார்கள்.

இந்தியத் துணிகளை அமெரிக்கா தற்சமயம் விரும்பும் நிலையை இந்திய அரசாங்கமும் இந்தியத் துணி வியாபாரிகளும் பயன்படுத்த வேண்டும். இந்த நிலை சிறிது காலம் மாத்திரம் இருந்து, மாறிவிடாதபடிபார்த்துக் கொள்ளவேண்டும்.

போலீசாரின் துப்பாக்கி பிரயோகம்

'அத்துமீறியது-அவசியமற்றது!'

கடந்த மே 20-ந் தேதியன்று ஷில்லாங் பகுதியிலுள்ள மிக்கீர் மலை அருகில் உள்ள ஹௌராகட் எனுமிடத்தில் பழ வியாபாரிகள் சிலர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த ஐந்து போலீசார், சில அதிகாரிகள் ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரியவருகிறது. அவர்கள் இப்போது தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கின்றனராம்.

"இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நிலைமைக்குத் தேவையற்றதும், மிதமிஞ்சியதுமாகும்," என்று, அது குறித்து விசாரணை நடத்திய மிக்கீர் முதல் வகுப்பு நீதிபதி கூறியிருக்கிறார்.

ஹௌராகட் எனுமிடத்தில், ஒரு போலீஸ் குழு, பழ வியாபாரிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட தகராறை ஒட்டி, துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகவும், இரண்டு பேர் பலியாயினர் என்றும் கூறப்படுகிறது.

தொழில் துறைத் தகராறுகள்

தொழில்துறைத் தகராறுகள் காரணமாக ஏற்பட்ட நஷ்டம், 1954-ல், 33,72,630 நபர் - நாட்களும், அதற்கு முந்திய ஆண்டில் 33,84,608 நபர் - நாட்களுமாக இருந்தன.

வேலை நிறுத்தங்களுக்குக் காரணமாக இருந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கை, முந்திய ஆண்டில் 772 ஆக இருந்தது 1954-ல், 840 ஆக உயர்ந்துவிட்ட போதிலும், அத்தகராறுகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும், அவை காரணமாக நஷ்டமான நபர் - நாட்களின் எண்ணிக்கையும், முந்திய ஆண்டைக் காட்டிலும் குறைவாகவே இருந்தன.

தீர்க்கப்படாதிருந்த தகராறுகளின் சராசரிக் கால அளவில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் காணப்படவில்லை. அவற்றின் விகிதாசாரம் 1954-ல், 7·1 சதவிகிதமும், 1953-ல் 7 2 சதவிகிதமும் ஆக இருந்தது.

இவ்வாண்டில் முடிவடைந்த தகராறுகளில் 64 சதவிகிதத்துக்கு மேற்பட்டவை ஐந்து நாட்களுக்கும் அதற்கும் குறைவாகவும் நீடித்துவந்தன. தகராறுகளில், 5·6 சதவிகிதம் ஒரு மாத காலத்துக்கு மேல் நீடித்திருந்தன.

மொத்தத் தகராறுகளில் — உயர்ந்தபட்சமாக 296 தகராறுகள் சிப்பந்திகளின் குறைகள் பற்றியதும், அதற்கடுத்தபடியாக 240 தகராறுகள்—கூலி, படி ஆகியவை பற்றியதுமாக இருந்தன.

பஞ்சாப் சர்க்காரின் அடக்குமுறைப் போக்கு!

வரிப்பணத்தில் ரூ. 10 லட்சம் விழுங்கிற்றும்!

கடந்த இரண்டு திங்களாக நடைபெற்ற அகாலிதளத்தவரின் உரிமைக் கிளர்ச்சியை அடக்குவதற்கென பஞ்சாப் சர்க்கார் செலவிட்டுள்ள தொகை பத்து லட்சம் ரூபாய்க்கும் அதிகமாம்.

சிறையில் அடைக்கப்பட்டதினால் அகாலிதளத்தவருக்கு உணவு தருவதற்காக மட்டும், சர்க்கார், தினம் குறைந்த பட்சம் 10 ஆயிரம் ரூபாய் செலவிடவேண்டியிருந்ததாம்

அகாலிதளத்தவருக்கு உணவு தர மொத்தமாக ரூ 6 லட்சமும், அவர்களை மறியல் செய்யுமிடத்திலிருந்து சிறைகளுக்கு எடுத்துச் செல்லவுமாக ரூ. 2 லட்சமும் செலவிடவேண்டியிருந்ததாம்.

அமிர்தசரசில் போலீஸ் பாதுகாப்பு முதலிய ஏற்பாடுகளுக்காக, அரசாங்கம் ரூ. 2 லட்சம் செலவிட்டதாம்!

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கையின்படி ஜூலை 15-ந் தேதியன்று திராவிடமெங்கணும் மும்முனைப் போராட்ட நினைவு நாள் நடைபெற்றுள்ளது; சிற்றூர்களிலும், பேரூர்களிலும் கொடியேற்று விழாவும், ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றுள்ளன.

மும்முனைப் போராட்டத்தில் பங்கு பெற்று வெற்றி தேடித் தந்த வீரர்களுக்கு வாழ்த்தும், போர்க்களத்தில் அடக்குமுறைகளுக்குப் பலியான வீரத் தியாகிகளுக்கு வணக்கமும் செலுத்தியுள்ளது திராவிடம்—பெருமையுடன்!

அன்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

சென்னை—1-வது வட்டம்

17—7—55 காலை 10 மணிக்கு, தோழர் பொ. சம்பந்தன் தலைமையில் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர் ஈ வளவன், திருநாவுக்கரசு, செங்கல்வராயன், கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்; சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சென்னை—3-வது வட்டம்

15—7—55 காலை 6 மணிக்குக் கொடியேற்று விழா நடைபெற்றது. மும்முனைப் போராட்ட நினைவு நாள் குறித்து அச்சிடப்பட்ட துண்டு அறிக்கை வெளியிட்டும், சுவரொட்டிகள் ஒட்டியும், மாலை 8 மணிக்கு கழக அறையில் தோழர் வி. கே. பி. சாமி தலைமையில் சிறப்புக்கூட்டம் நடத்தியும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கூட்டத்தில், தோழர்கள் அய்யாத்துரை, ஞானதேசிகன், எஸ். கோபால், சின்னமணி ஆகியோர் பேசினர். கூட்டத்தில் தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளராகத் தோழர் என். வி. நடராசன் நியமிக்கப்பட்டது குறித்துப் பாராட்டுதலும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சென்னை—8-வது வட்டம்

15—7—55 காலை 8½ மணிக்கு, கழகப் பணிமனையில் கொடி ஏற்றுவித்தும், துண்டு அறிக்கைகளை வெளியிட்டும், சுவரொட்டிகளை ஒட்டியும், மறைந்த மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தியும் நினைவுநாள் கொண்டாடப்பட்டது.

சென்னை-12-வது வட்டம்

15—7—55-ல், கழகக் கட்டிடம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, காலையில் கொடியேற்றப்பட்டு கழகப் பணிமனையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினர். வட்டத்துப் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கூட்டத்திற்குப் பிறகு நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் என். வி. நடராசன் அவர்களை துணைப் பொதுச் செயலாளராக நியமித்ததுபற்றி மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சென்னை 37-வது வட்டம்

17—7—55 காலை 9 மணிக்கு, கழகப் பணிமனை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, கழகக் கொடியேற்றுவிக்கப்பட்டது. தோழர் பொ. ஏழுமலை தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஞானசேகரன், ம. கி. இராமலிங்கம், மு. அரங்கநாதன், பொ. நா. சண்முகம், கோ. இளவரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளராகத் தோழர் என். வி. நடராசன் நியமிக்கப்பட்டமைக்குப் பாராட்டியும், அவரை வரவேற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை 44-வது வட்டம்

15—7—55 இரவு 9 மணிக்கு, தோழர் புதுமார்க்க லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். அறிவழகன், து. கோபாலகிருட்டிணன், குப்புசாமி, இராதாகிருட்டிணன், வடமலை ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

சென்னை-சைதாப்பேட்டை

15—7—55ல், முக்கிய தெருக்களில் தோரணங்கள் கட்டி, மாலை 4-30 மணிக்கு தோழர் ஜி. முத்துகிருஷ்ணன் தலைமையில் ஊர்வலமும், மாலை 6-30 மணிக்கு, தோழர் தங்கதுரை தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் எஸ் எஸ். தென்னரசு, ஜி. முத்துகிருஷ்ணன், சம்பந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தாத்தையங்கார்பேட்டை

15—7—55 மாலை 6 மணிக்கு, பிள்ளாதுரை தி. மு. கழகச் சார்பில், சந்தைத் திடலிலிருந்து புறப்பட்டு, முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலம் நடைபெற்றது.

மாரண்டஅள்ளி

15—7—55 மாலை 5 மணிக்கு, தி. மு. கழக நிலையத்திலிருந்து தோழர் எம். சி. இலக்குமணன் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலம் பஸ் ஸ்டாண்டை அடைந்ததும் தோழர் எம். எஸ். செயராமன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எம். சி. இலக்குமணன், எம். ஆர். கோவிந்தராசன், எம. வி. நாராணசாமி, எம். ஆர். நீலமேகம் என். ஏ. பாஷா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

உடுமலை

15—7—55 மாலை 4 மணிக்கு, புதுமை மன்றத்தினரால் கொண்டாடப்பட்டது. தோழர் தங்கவேலு தலைமையில், தோழர்கள் கனகு, மீர்சான், கருப்பண்ணன் ஆகியோர் மும்முனைப் போராட்டத்தில் உயிர் துறந்த வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்திக்கொண்டு சொற்பொழிவாற்றினர். தோழர் சந்தானம் இனிப்புகளும், தோழர் டானியேல் இன்னிசையும் வழங்கினர்.

சின்னாளப்பட்டி

15—7—55 இரவு 7-30 மணி அளவில், கழகக் கட்டிடத்தின் எதிரில் தோழர் அ. வீரப்பன் தலைமையில்பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். சேதுபதி, எம். வீரணன், எஸ். முத்துகிருஷ்ணன், எஸ். ராசன், ராமகிருஷ்ணன், ஆர். வெள்ளைச்சாமி, கே. வெள்ளையங்கிரி, ஏ. எம். டி நாச்சியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மும்முனைப் போராட்டத்தில் உயிர் நீத்த வீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது. மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சேலூர் (வ. ஆ.)

15—7—55 காலை 9 மணிக்கு, கழகப் பணி மனையில், தோழர் கே. எம். சாரங்கபாணி கழகக் கொடி ஏற்றுவித்தார். மாலை 6 - மணிக்கு அவர் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலம் கழகப் பணி மனையை அடைந்ததும், தோழர்கள் பலர் மும்முனைப் போராட்டத்தின் நிகழ்ச்சிகள் பற்றி சொற்பொழிவாற்றினர்.

நெடும்பலம் (தஞ்சை மாவட்டம்)

15—7—55ல், நெடும்பலம், செல்வம் தேனீர் நிலையத்திற்கு எதிரில் கழகக் கொடி உயர்த்தப்பட்டது. மும்முனைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வைரிசெட்டிப்பாளையம்

15—7—55 இரவு 8 மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் சி. மாணிக்கம் தலைமையில், நடைபெற்றது. தோழர்கள் ச. கணபதி, வெ. செகநாதன், கை. ஆறுமுகம், இரா. சுந்தரேசன், து. மருதமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

ஏழுமலை (மதுரை மாவட்டம்)

15—7—55 மாலை 4 மணிக்கு, நகரின் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலம் நடைபெற்று, பெரியார் திடலை யடைந்ததும், தோழர் இரா. சு. தங்கராசன், கழகக் கொடியேற்றுவித்தார். தோழர் கே. ஆனந்தகிருஷ்ணன் சொற்பொழிவாற்றிய பின்னர், போராட்டத்தில் உயிர் நீத்த வீரர்களுக்கு வணக்கம் தெரிவிக்கப்பட்டது.

மயிலரங்கம்

15—7—55 மாலை 7½ மணிக்கு கழக மனையில் தோழர் ஏ. பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. ஓத்தப்பாளையம் கழக மனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு சென[illegible]ரபாண்டியன் திடலை அடைந்ததும், தோழர் ஏ. பெரியசாமி கழக கொடியேற்றிவைத்தார். தோழர் ஏ. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஆர். பிச்சமுத்து, என். குப்பமுத்து, ஏ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஆச்சரியந்தான்!

கல்லூரிகளில் இடமிருக்கிறதாம்!

சென்னை மாகிலத்திலுள்ள பல கல்வி நிறுவனங்களிலும், பட்டப் படிப்பிற்கான வகுப்புகளிலும் இடம் காலி இருப்பதாகவும், இடம் காலியிருக்கும் எந்தக் கல்லூரியிலும் இத்திங்கள் 31-ந் தேதிக்குள் மாணவர்கள் சேர்த்துகொள்ளப்படுவார்கள் என்றும், சென்னை மாகில ரிஜிஸ்திரார் அறிவித்திருக்கிறார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், சென்னை பல்கலைக் கழகக் கல்லூரிகளில் ஜூனியர் இண்டர்மீடியெட் வகுப்பில் உள்ள மொத்த இடம் 19,264 என்றும், அந்த வகுப்பில் இன்னும் மொத்தமாக 1,360 இடங்கள் காலி இருப்பதாகவும், அவற்றுள் விஞ்ஞானப் பிரிவுகளில் 435-ம், சரித்திரம், பொருளாதாரப் பிரிவுகளில் 925-ம் இருப்பதாகவும், இந்தக் காலி இடங்களில், விஞ்ஞானப் பிரிவுகளில் பெண்களுக்கிருக்கும் காலி இடங்கள் 331 என்றும், சரித்திர, பொருளாதாரப் பிரிவில் 523 இடங்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பட்டப்படிப்பு வகுப்புகளில் கீழ்க்கண்டவாறு காலி இடங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது :—

பி. ஏ., வகுப்பில் 781 இடங்களும், இதில் பெண்கள் கல்லூரிகளில் 265 இடங்களும், பி. எஸ். சி-யில் 46 என்றும், இவற்றுள் பெண்கள் கல்லூரிகளில் 8 இடங்கள் காலி என்றும், பி. காம்., வகுப்புகளில், ஆண்கள் கல்லூரிகளில் மொத்தம் 204 இடங்கள் காலி என்றும் தெரிகிறது.

இது பற்றிய மேலும் விபரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பும் மாணவர்களோ, அல்லது அவர்களது பெற்றோர்களோ சென்னை சேப்பாக்கத்திலிருக்கும் சென்னை பல்கலைக் கழகக் கட்டிடத்தில், ரெஜிஸ்திராரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நவீன உலகத்தைப் பற்றிய பிரச்சினைகள் அடங்கியுள்ள கலைக் களஞ்சியமொன்றை, எளிய இந்தி மொழியில் மத்திய கல்வி மந்திரி காரியாலயம், இப்பொழுது தயாரித்துவருகிறது. இந்தக் கலைக் களஞ்சியத்தின் முதல் புத்தகம் ஏற்கனவே பூர்த்தியாகிவிட்டது.

மனிதனை மனிதனாக மதிக்கும் மதில் இல்லாத சிறைச்சாலை!

'கொட்டடி' கொடுமையோ, 'நிர்ப்பந்த நிலைமை'யோ அங்கு கிடையாதாம்!

'கொடிய குற்றவாளி'யும் குணம் திருந்தும் விந்தை!

ஒரு அதிசயமான சிறைச்சாலை! அதற்கு மதில் சுவர்கள் இல்லை; துப்பாக்கிகள் தாங்கிக்கொண்டு நிற்கும் காவற் படையினர் இல்லை; எளிதாக ஏறி இறங்கக்கூடிய கம்பி வேலியேயன்றி, வேறு அடைப்பு ஒன்றும் இல்லை; அங்கு, 'குற்றவாளிகள்' என்று தீர்மானிக்கப்பட்ட 1,500 பேர் இருக்கின்றனர்; அதன் பெயர் கலிபோர்னியா நிலையம்

அந்த விநோதமான சிறைச்சாலை சீனோ என்னும் சிறிய நகரில் உள்ளது. குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்பது முக்கியமல்ல—அவர்களுக்குப் புது வாழ்வளிப்பதே முக்கியம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டது அந்தச் சிறைச்சாலை!

சிறைச்சாலைகளில் குற்றவாளிகளைச் சிறிய அறையில் அடைத்து வைப்பது வழக்கம்; அவர்கள் ஒன்றும் செய்யாமல்—ஒன்றும் பேசாமல் சும்மா இருப்பார்கள். இந்தப் புதுமையான சிறைச்சாலையிலோ, அவர்கள், வசதியான கட்டிடத்தில் இருக்கிறார்கள்; உண்டிச்சாலையில் ஒன்றாய் அமர்ந்து உணவு கொள்கிறார்கள் அந்த இடத்தில் பூங்காக்கள் போன்ற இடங்கள் உள்ளன; அங்கு குற்றவாளிகளின் மனைவி-மக்கள் அவர்களைக் கண்டு பேசலாம்; சிறைச்சாலையினின்று விடுதலையான பின் சிறையில் இருந்தவர்கள் ஏதேனும் தொழில் செய்து பிழைக்கும் பொருட்டு, அவர்களுக்குத் தொழில் பயிற்சி அளிக்கிறார்கள்.

அவர்கள் விடுதலை பெற்ற பின், தன்மதிப்புள்ளவர்களாகவும், சட்டத்தை மதிப்பவர்களாகவும்சமுதாயத்தில் பொறுப்புணர்ந்த மக்களாகவும் வாழ வேண்டும். அதற்குரிய பயிற்சி சீனோ என்னும் இடத்திலுள்ள சிறைச்சாலையில் கிடைக்கிறது.

அங்குள்ள கைதிகளுள் மிகப் பலர் துப்பாக்கியைத் துணையாகக் கொண்டு திருடியவர்கள்; அதற்கு அடுத்த பெருந் தொகையினர் கொள்ளையடித்தவர்கள்; பெரிய களவுகள் செய்தவர்கள்; 'செக்'குகள் எழுதி ஏமாற்றியவர்கள்.

கொலைக் குற்றஞ் செய்ததற்காக மற்றச் சிறைச்சாலைகளில் தண்டனையை அநுபவிப்போர் சிலர் தமது தண்டனை இறுதிக் காலத்தில் இந்தச் சிறைக்கூடத்துக்கு அனுப்பப்படுகின்றனர். விடுதலையான பின் அவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு அவர்களுக்குவாய்ப்பளிக்கப்படுகிறது.

ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு கைதியையும் தனித் தனியே கண்டு பேசி, அவர்கள் மனோ நிலையைப் பரிசோதனை செய்கிறார்கள். கைதி ஒருவன் புது வாழ்வு பெற்று, சமுதாயத்தில் பொறுப்பு வாய்ந்த உறுப்பினனாக வாழக் கூடியவன் என்று கண்டால், அவன் விடுதலையாகும் காலத்தை அவனுக்குச் சொல்வார்கள்.

அந்தச் சிறைச்சாலையிலுள்ளவர்கள் சீர்ப்படுவதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு; அவர்களை, அவர்களுடைய உற்றார்-உறவினர் வந்து பார்க்கவும், அளவளாவிப் பேசவும் வசதி இருக்கிறது; பேசுவதற்குரிய இடத்தைக் கைதிகளே அமைத்திருக்கிறார்கள்; அவர்களே ஒரு இடத்தைச் செம்மைப்படுத்தி, மரங்கள் வளர்த்து, அதனை அழகிய பூங்காவாக்கிவிட்டார்கள்; அங்கே அமர்ந்திருந்து உண்பதற்கு மேசைகளும், பெஞ்சுகளும் கட்டிவிட்டார்கள்.

அவர்களுடைய மனைவி-மக்களும், பெற்றோரும், அவர்களை அந்த இடத்தில் கண்டு பேசுகிறார்கள்; அவர்கள் தாங்கள் கொண்டு வரும் உணவைக் கைதிகளோடு இருந்து உண்கிறார்கள்; நான்கு மணி நேரம் அவர்கள் இவ்வாறு அங்கு தங்கி மேற்பார்வை யாதுமின்றி, கைதிகளோடு பேசிவிட்டுப் போகலாம்.

கைதிகள், தங்கள் உற்றார் உறவினர் தங்களைப் பார்க்கவரும் நாட்களில் சிறைச்சாலை உடைகளை உடுத்த வேண்டியதில்லை—தங்கள் சாதாரண உடைகளை அணிந்துகொள்ளலாம்.

அங்குள்ள கைதிகள் பலவிதத் தொழில்கள் கற்கிறார்கள். செங்கல்லும், ஓடும் செய்தல், வெல்டிங், இயந்திர சம்பந்தமான வேலைகள், பண்ணை வேலை முதலிய எண்ணிறந்த தொழில்களை அவர்கள் படிக்கிறார்கள். கைதிகள் விடுதலை பெற்றுப் போனவுடன் யாதேனும் தொழில் செய்து பிழைக்கலாம். உலகத்திலுள்ள சிறந்த சிறைக்கூட ஆஸ்பத்திரிகளுள் அங்குள்ள ஆஸ்பத்திரியும் ஒன்று.

இவ்வாறு அதிகப் பாதுகாப்பு இல்லாமல் இருந்தும், கைதிகள் ஏன் ஓடிப் போகவில்லை? 1,500 பேர் அங்கே இருக்கின்றனர். அவர்களை அறைக்குள் அடைத்துப் பூட்டி வைக்கவில்லை. ஆயினும் ஓடிப்போவோர் தொகை நூற்றுக்கு ஒன்றுகூட இல்லை.

முள் கம்பி அடைப்பை எளிதாக ஏறி அதைத் தாண்டிவிடலாம். கைதிகள் அங்கு வந்து சேர்ந்ததும், அந்த வேலியைத் தங்களுக்குக் கேடு செய்யாமல் தாண்டுவது எப்படி என்று அவர்களுக்குக் காட்டுகிறார்கள்; ஆனால், அவர்களுக்கு உண்மையை எடுத்துரைக்கிறார்கள்.

"நீங்கள் இந்தச் சிறைக்கூடத்திற்குள் இருக்கும்போது கட்டுப்பாட்டுக்குட்பட்ட சுதந்தரத்தை அநுபவிக்கலாம்; ஆனால், நீங்கள் ஏறிக் குதித்துப் போய்விட்டால், எப்படியும் உங்களைப் பிடித்துவிடுவார்கள்; நீங்கள் இன்னும் பல வருடம் தண்டனையை அநுபவிக்க வேண்டி நேரிடும்; இந்தச் சிறைக்கூடத்துக்கும் நீங்கள் வரமுடியாது"—இவ்வாறு அவர்களுக்குச் சொல்லிவிடுகிறார்கள்.

ஒருவன் எந்தவித குற்றஞ் செய்தவனாயினும் அவன் ஒழுங்காய் இருப்பானாயின், அந்தச் சிறைக்கூடத்தில் அவன் சில உரிமைகள் உள்ள மனிதனாக நடத்தப்படுகிறான்.

'இன்ஷ்யூரன்ஸ்' பற்றி ஆச்சாரியார்

"சென்னை நகரின் முக்கிய வீதி ஒன்றில் ஆறடுக்குகள் கொண்ட கட்டிடம் அமைப்பது ஒரு புதிய வேலையாகும். இதேமாதிரி எல்லோரும் 'காப்பி' அடித்துப் பெரிய கட்டிடங்கள் கட்டமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்; சென்னை நகரம் இதுவரையிலும், 'அமெரிக்க பாணி'யில் சென்றுவிடாமல் எதிர்ப்பாகவே இருந்துவந்திருக்கிறது,"

என்று, ஆச்சாரியார், சென்னை சைனாபஜாரிலுள்ள பம்பாய் மியூச்சுவல் இன்ஷ்யூரன்ஸ் கட்டிடத்தின் திறப்பு விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இன்ஷ்யூரன்ஸ் என்பது, எமனுக்கு எதிராக மனிதன் கண்டு பிடித்த ஒரு சிறந்த சாதனமாகும்; இன்ஷ்யூரன்சுகள் வளர வளர மரணத்தின் நாச வேலைகள் முக்கியமற்றவைகளாகிவிடும்; மரணம் தேசியமயமாக்கப்பட்டு சக்தியற்றதாக்கப்பட்டுவிடும்,"

என்றும் அவர் அச்செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

நான்கு வல்லரசு மாநாடு!

நல்ல சூழ்நிலையில் துவக்கம்

ஜினிவா, ஜூலை 18—

நான்கு வல்லரசுகள் மாநாடு இன்று, காலை 10 மணிக்கு புகழ் மிக்க 'பாலஸ் டி நேஷன்ஸ்' என்ற அகில உலக அரண்மனையில் நல்லதோர் சூழ்நிலையில் கூடியது.

10 ஆண்டுகளுக்குப் பிறகு நான்கு வல்லரசுகளும் சந்திப்பது இதுதான் முதன்முறையாகும்.

மாநாட்டிற்கு அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் தலைமை தாங்கி உரையாற்றினார்.

காலையில் பிரெஞ்சுப் பிரதமர் எட்கார் பாவ்ரேயும் மாலையில் இங்கிலாந்துப் பிரதமர் அந்தோனி ஈடனும் உரை நிகழ்த்தினர்.

ரஷ்யப் பிரதமர் மார்ஷல் நிகோலாய் புல்கானின் கூட்டு ஐரோப்பியப் பாதுகாப்புத் திட்டத்தைத் தாக்கல் செய்தார்.

முதல் நாள் நிகழ்ச்சியின் இறுதியில், உலக சமாதானத்திற்காக, மற்றவர்கள் உண்மையாக ஒத்துழைத்து வேலை செய்ய உறுதி பூண்டிருப்பதாக ஒவ்வொரு பிரதிநிதிக் குழுவும் நட்புணர்வுடன் தெரிவித்தது தனக்கு பெரும் திருப்தியூட்டியிருப்பதாக அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் தெரிவித்திருக்கிறார்.

மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசிய ஐசனோவர் 'பல்வேறு நாடுகளுக்கிடையே அரசியல் தத்துவ வேறுபாடுகள் இருப்பினும், அந்த வேறுபாடுகள் பல நாடுகளும் பொதுவாக ஒன்றுபடுவதற்குரிய சாத்தியக் கூறுகளை ஒதுக்கிவிடவில்லை,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'ஜெர்மனி பிளவுபட்டிருப்பதை ஒழித்து சுயேச்சையான தேர்தல் அடிப்படையில் ஐக்கிய ஜெர்மனியை ஏற்படுத்த வேண்டும்; ஜெர்மனியை நடுநிலைமை நாடாக்க வேண்டும் என்பதை நான் எதிர்க்கிறேன்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

'சோவியத் சார்பு நாடுகளில் வாழும் மக்களுக்கு, தங்களின் சொந்த அரசாங்கத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை வேண்டும்; கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சில நாடுகளின் மக்களுக்கு ஐ. நா. சாசனத்தில் கண்ட வாக்குறுதிகள் வழங்கப்படவில்லை' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரெஞ்சுப் பிரதமர் பாவ்ரே பேசுகையில் 'மேற்கு ஐரோப்பிய யூனியனில் மேற்கு ஜெர்மனிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படை பலத்திற்கு மேல் ஐக்கிய ஜெர்மனியின் படை பலம் இருக்கக்கூடாது,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'ஆயுதங்களைக் குறைப்பதால் மிஞ்சக்கூடிய பணத்தைக்கொண்டு அகில உலக நிதி அமைக்கவேண்டும். அந்த நிதி, பின்தங்கிக் கிடக்கும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுமாறு செய்யப்பட வேண்டும்,' என்றும் பிரெஞ்சுப் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் பேசுகையில், ஜெர்மனி ஐக்கியம் பற்றி திட்டவட்டமான கருத்தறிவித்திருக்கிறார்.

சோவியத் பிரதமர் புல்கானின், இரண்டு அம்ச ஐரோப்பிய பாதுகாப்புத் திட்டத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்

'எல்லா அன்னியப் படைகளும் ஐரோப்பாவிலிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும்; பார்மோசாவில் செஞ்சீனாவின் உரிமைக்கு அங்கீகாரம் தரப்பட்டால் உலக நெருக்கடி தீர அது பேருதவியாக இருக்கும்,' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகஸ்டு கிளர்ச்சி

திராவிடர் கழகத் தீர்மானம்

திருச்சி, ஜூலை 18—

"வடநாட்டு ஆட்சியையும், ஆதிக்கத்தையும் எதிர்க்கவும், இந்தியைப் புகுத்தித் தமிழ்நாட்டையும் அதன் கலாச்சாரத்தையும் தமிழ் மொழியையும் ஒழித்து, தமிழ்நாடு வடநாட்டாருக்கு நிரந்தர அடிமைநாடாக இருக்க மத்திய அரசாங்கம் என்பதும், வடவர்களும், இந்நாட்டுப் பார்ப்பனர் பலரும் பலமான ஏற்பாடு செய்து தருவதாக இக்கூட்டம் உறுதியாக நம்புவதால் இதன் எதிர்ப்பைக் காட்டவும், இனி இந்நாட்டவர்கள் இந்தியப் பிரஜையாக இருப்பதற்கு தாங்கள் இஷ்டப்படவில்லை என்பதைக் காட்டவும், இந்திய அரசாங்கத்துக்கு உணர்த்தவும், இந்திய தேசியக் கொடி என்பதை ஆகஸ்டு 1-ந் தேதியன்று தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு இந்தியப் பிரஜை என்பவரும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்பதாக இக்கூட்டம் தீர்மானிக்கிறது,"

என்று, 17-7-55 அன்று திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக நிர்வாகக் குழுவில், பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் முன்மொழிய, கூடியிருந்த பலரும் ஏற்றுக் கொள்ள, தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கலைக்கப்பட்ட குழு கலைய மறுக்கும் விசித்திரம்!

வடநாட்டு நகரசபை ஒன்றில் சம்பவம்

ஹவியா நகர சபையின் கலைக்கப்பட்டுவிட்ட சுகாதார குழு ஒன்று, தான் தொடர்ந்து பதவியிலிருப்பதாக அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

நகரசபையின் கடந்த ஜூலை 8-ந் தேதி கூட்டத்தில், அந்தச் சுகாதாரக் குழுவைக் கலைத்துவிட்டு, டாக்டர் குல்கர்னி என்பவர் தலைமையில் புதியதொரு சுகாதாரக் குழு நியமிக்கப்பட்டது.

கலைக்கப்பட்ட சுகாதாரக் குழுவின் தலைவர், அலுவலகத்தை இழுத்துப் பூட்டி 'சீல்' வைத்துவிட்டிருக்கிறார்.

பூட்டியிருந்த அந்த சுகாதாரக் குழுவின் அலுவலகத்தை புதிய தலைவரும், நகரசபைத் தலைவருமாகச் சேர்ந்து உடைத்து 'பொறுப்பு' ஏற்றுக்கொண்டனராம்; என்றாலும் கலைக்கப்பட்ட குழு, தானே தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கோட்டையில்பறக்கும் தேசியக் கொடி.

இறக்க முயன்றவருக்கு தண்டனை

சென்னை, ஜூலை 16—

சென்னை சர்க்கார் தலைமை அலுவலகத்தில் எழுத்தர் வேலை பார்த்துவந்தவரும், சர்க்கார் ஊழியர் சங்க நிர்வாக குழு உறுப்பினருமான டி. ஜே. வி. நாயுடு என்பவர், சென்னை கோட்டையில் உள்ள கொடிக் கம்பத்தில் பறக்கும் கொடியை இறக்க முயற்சித்ததற்காக, மூன்று வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்

குற்றத்திற்குரிய, அத்துமீறி நுழைந்ததாக இ. பி கோ. 447-ம் பிரிவின்படி அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

தான் கொடிக்கம்பத்தில் ஏறி, கொடி அவிழ்க்க எண்ணி, முயற்சித்தது உண்மைதான் என்றும், ஆனால் சர்க்காரின் கவனத்தைக் கவரவே அவ்வாறு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தனக்கு சர்க்கார் தர வேண்டிய 'கிராஜுடி' படி தரப்படவில்லை என்றும், சர்க்கார் தனக்கு அநீதி இழைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

24-7-55 மாலை 3-மணிக்கு திருவண்ணாமலை சாதுக்கள் சத்திரத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டு நிதி—பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணா ஆகியோர் சுற்றுப்பிரயாணத் திட்டம்—செயலாளர் கொண்டுவரும் இதர தீர்மானங்கள் ஆகியவை ஆய்வுக்கு வரும்,"

என்று வட ஆற்காடு மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

நன்றி

"பொதுச்செயலாளர் அவர்கள் அறிக்கைக்கிணங்க, டால்மியாபுரம் பெயர் மாற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தொண்டாற்றிய தொண்டர் குழுவினருக்கும், ஊர்வலத்தில் கலந்து சிறப்பித்த பொது மக்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், நிகழ்ச்சிகள் நல்ல முறையில் வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைத்த கல்லக்குடி கழகத் தோழர்களுக்கும், மற்ற எல்லா நண்பர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் அ. பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

இந்தியாவில் 170 சர்க்கரை ஆலைகள்

92,000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனராம்!

1953-ம் ஆண்டில், இந்தியாவில் மொத்தம் 170 சர்க்கரை ஆலைகள் வேலை செய்துவந்தன என்றும், அவற்றில் மொத்தம் 92,000 தொழிலாளர்கள் வேலை பார்த்துவந்தனர் என்றும் கூறப்படுகிறது.

1932-ம் ஆண்டில் 31 ஆலைகள் வேலை செய்துவந்தன; அவற்றில் மொத்தம் 33,900 தொழிலாளர்கள் வேலை பார்த்துவந்தனர்; 1953-ம் ஆண்டில் ஆலைகளின் எண்ணிக்கை 170 ஆகவும்; அவற்றில் வேலை பார்த்துவந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 91,997 ஆகவும் உயர்ந்தது.

கரும்பு பிழியும் பருவத்தின் கால அளவு, மாநிலத்திற்கு மாநிலம் பெரிதும் வேறுபட்டிருந்ததாகத் தெரிகிறது. பீகாரில் 121 நாட்களிலிருந்து 183 நாட்கள் வரையிலும் உத்தரப் பிரதேசத்தில் 101 நாட்களிலிருந்து 176 நாட்கள் வரையிலும், பம்பாயில் 116 நாட்களிலிருந்து 174 நாட்கள் வரையிலும், ஆந்திராவில் 56 நாட்களிலிருந்து 93 நாட்கள் வரையிலும் நீடித்திருந்தது. இதர மாநிலங்கள் பெரும்பாலானவற்றிலும் கால அளவு 88 நாட்களிலிருந்து 196 நாட்கள் வரை நீடித்திருந்தது.

பருவகால முடிவுக்குப் பிறகு, ஒரு சில தொழில் நுட்ப சிப்பந்திகள், குமாஸ்தாக்கள், தொழிலாளர்கள் ஆகியோர் நீங்கலாக, இதர சிப்பந்திகள் யாவரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிடுகின்றனர்.

சர்க்கார் தகவல் கேட்கிறது!

குளித்தலை போன்ற இடங்களில் விவசாயிகள் — மிராசுதாரர்கள் உறவு நிலைமையில் கடந்த சில நாட்களில் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகள் குறித்து பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்திபற்றி அறிக்கை அனுப்புமாறு திருச்சி மாவட்ட அதிகாரியிடம் சென்னை சர்க்கார் கேட்டுள்ளனர் என்று தெரிகிறது.

பண்டிதரின் கருத்து

'திருப்திகரமாயிருந்தால் மட்டுமே ஏற்போம்'

அகாலி தள நிலை

அமிருதசரஸ், ஜூலை 18—

சீக்கியர்களின் குறைகள் குறித்தும், பஞ்சாபி மொழி பேசும் மாநிலம் அமைப்பது குறித்தும் இந்தியப் பிரதமர் நேரு தெரிவித்துள்ள முடிவுகள், அகாலி தலைவர்களுக்கு திருப்தி தரக்கூடியனவாகயிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்று அகாலி தளத் தற்காலிகத் தலைவரான சர்தார் பகதூர் சிங் என்ற மக்கள் சபை உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்.

அடுத்த பொதுத் தேர்தல்

அதிகாரி கருத்து ஏற்கப்படுகிறது

புதுடில்லி, ஜூலை 19—

அடுத்த பொதுத் தேர்தல்களை 1957 ஜனவரி அல்லது பிப்ரவரியில் நடத்திவிட வேண்டும் என்று தேர்தல் கமிஷனர் சுகுமார் சென் கூறிய கருத்தை காங்கிரஸ், ம - சோ. கம்யூனிஸ்டு, ஜனசங் ஆகிய கட்சிப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டு விட்டனராம்

மேலும், மாநில சட்ட சபைகளுக்கும், மத்திய மக்கள் சபைக்கும் நடைபெறுகின்ற தேர்தல்கள் அனைத்தும் கூடியவரையிலும் ஒரே காலத்தில் நடைபெற வேண்டுமென்பதற்கும் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனராம்.

சென்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர், மீண்டும் ஆந்திரா, திரு-கொச்சி, பெப்சு ஆகிய மாநிலங்களில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்று விட்டதால் இந்த முறை அந்த மாநிலங்களில் பொதுத் தேர்தல் நடைபெறாது.

ஒவ்வொரு ஆண்டிலும் வாக்காளர் பட்டியல் பரிசீலனை செய்யப்படுவதுபோல், இவ்வாண்டிலும் சென்ற 1956-ல் எடுக்கப்பட்ட வாக்காளர்களின் பட்டியல் பரிசீலனை செய்யப்பட்டு, அடுத்த பொதுத் தேர்தலிலும் அப்பட்டியலே பயன்படுத்தப்படும் என்றும், அவ்வேலையில் தங்கள் ஒத்துழைப்பைத் தர எல்லா கட்சியினரும் முன்வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வாக்குச் செய்வோரில் ஆள் மாறாட்டத்தைப் போக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிகிறது சென்ற பொதுத் தேர்தலின் போது குறிப்பாகப் பெரிய நகரங்களிலும், பட்டணங்களிலும் இது போன்ற ஆள் மாறாட்டம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டிருப்பது இங்கு கருதத்தக்கது

தபால் மூலம் வாக்குப் பதிவு செய்வது கூடியமட்டிலும் குறைக்கப்பட வேண்டும் என்று கட்சிப் பிரதிநிதிகள் கூறியிருக்கின்றனராம்.

சென்ற பொதுத் தேர்தலில் மேல்சபைகளுக்கான தேர்வில் பல வாக்குகள் தபால் மூலமாகவே செய்யப்பட்டதென்பதும், அப்படிச் செய்தகொண்டதின் மூலம், வாக்காளர்கள், போட்டியிட்டவர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது என்று அவர்கள் யாவரும் தெரிவித்திருக்கின்றனராம்.

இரயில்வே நிர்வாகத்தில்...

ஊழியர்களுக்கு பங்கு!

இந்திய இரயில்வேக்களின் நிர்வாகத்திலும், கண்காணிப்பிலும் இரயில்வே ஊழியர்களுக்குப் பங்கு இருக்க வேண்டுமென்பதை இந்திய சர்க்கார் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளதாக முன்னாள் இந்திய சர்க்கார் தொழிலாளர் அமைச்சர் வி. வி. கிரி கூறியிருக்கிறார்.

உருக்குத் தொழில் பயிற்சிப் பள்ளி

வடநாட்டிலேயே அமைகிறது

ரூ. 75 - லட்சம் செலவில் ஏற்பாடாம்!

நாகபுரி, ஜூலை 18—

பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்கான வேலைகளை துரிதப்படுத்துவதற்காக, ரெய்பூரில் சுமார் ரூ. 75 லட்சம் செலவில் உருக்குத் தொழிலுக்கான அகில இந்திய பயிற்சிப் பள்ளி ஒன்று துவங்கப்படவிருக்கிறது.

பள்ளிக்கான மாளிகை வரும் அக்டோபரில் அமைக்க ஏற்பாடாகியுள்ளதாம்.

பக்தூன் பிரதேசம் பற்றி கபார்கான்

பெஷாவர், ஜூலை 18—

"மேற்கு பாகிஸ்தானை ஓர் உறுப்பாக்கும் திட்டமாக எனது கருத்து மாறவில்லை; என்றாலும், எனக்கும் சர்க்காருக்கும் இடையே இப்போது பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருப்பதினால், இப்பிரச்சினையில் எனது கருத்தை நான் வலியுறுத்தவில்லை; பேச்சுவார்த்தைகளின் முடிவு சீக்கிரம் அறிவிக்கப்படும்,"

என்று கான் அப்துல் கபார்கான் குறிப்பிட்டிருக்கிறார்.

எல்லைப்புற மாநிலத்தின் எதிர்காலம் பற்றிக் குறிப்பிட்டு, 'பக்தூன் பிரதேசங்கள் எல்லாம் பக்தூனியர்களுடையதே; பஞ்சாபுக்கு பஞ்சாபிகள் சர்க்கார்—சிந்துவுக்கு சிந்திகள் சர்க்கார் போல, பக்தூன் பகுதிகளுக்கு, பக்தூனியர் சர்க்கார் இருப்பது இன்றியமையாதது,' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிலாய் உருக்குத் தொழிற்சாலை

1958-ல் உற்பத்தி துவங்கி விடுமாம்

நாகபுரி, ஜூலை 18—

பிலாயில் உருவாகும் இரும்பு எஃகுத் தொழிற்சாலை 1958-ல் உற்பத்தி துவங்கும் என்று தொழில் இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

தொழிற்சாலை அமைப்பு இன்னும் ஐந்தாறு மாதங்களில் துவங்கி விடும் என்றும், வேலை துரிதமாக நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

உங்கள் குறிப்புக்கு!

உலக மக்கள் தொகை 1954-ல், 252,80,00,000-க்கும் அதிகமாக இருந்ததாம்!

ஐ. நா புள்ளிவிவர நிபுணர்களுக்குக் கிடைத்துள்ள புள்ளிவிவர கணக்குப்படி கடந்த ஆண்டு மத்தியில் வட அமெரிக்காவின் மக்கள் தொகை 23,30,00,000 என்றும், தென் அமெரிக்காவின் மக்கள் தொகை 12,11,00,000 என்றும், ஆப்பிரிக்காவின் மக்கள் தொகை 21,60,00,000 என்றும், ரஷ்யாவைச் சேர்க்காமல், ஆசிய, ஐரோப்பிய நாடுகளின் மக்கள் தொகை முறையே 132,30,00,000; 40,65,00,000 என்றும், சோவியத் நாட்டின் மக்கள் தொகை 21,45,00,000 என்றும், பசிபிக் கடல் தீவுகளின் மக்கள் தொகை 1,42,00,000 என்றும் தெரிய வந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.